18.02.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவையை துவக்க ஏற்பாடு

உடுமலையை அடுத்துள்ள கிருஷ்ணாபுரத்தில் உள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 2015-16-ஆம் ஆண்டு அரவை துவக்குவதற்கான முன்னேற்பாடு பணிகள் புதன்கிழமை துவங்கின.

ஆலை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஆலையின் தனி அலுவலர் இரா.இந்துமதி தலைமை வகித்தார். அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.வேலுசாமி, செயலாளர் டபுள்யு.என்.கே.ஈஸ்வரன் உள்ளிட்ட விவசாய சங்க நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில், நிர்வாகக் குழுத் தலைவர் எஸ்.சின்னப்பன் (எ) பழனிசாமி, தொழிலாளர் நல அலுவலர் எஸ்.நவநீதன் மற்றும் கரும்பு விவசாயிகள், ஆலைத் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## விவசாயிகளுக்குப் பயிற்சி

செய்யாறை அடுத்த அனக்காவூர் வேளாண் விரிவாக்க மையத்தில் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு செவ்வாய்க்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

அனக்காவூர் வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற பயிற்சிக்கு தலைமை வகித்த வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, இப்

பயிற்சி மூலம் அளிக்கப்படும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சிறந்த முறையில் பயிர் செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கீழ்நெல்லி வேதபுரி அறிவியல் மைய சிறப்பு அறிஞர் ராஜேஷ் பங்கேற்று அனைத்து பயிர்களுக்கும் உர மேலாண்மை, பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை குறித்து தெரிவித்து பயிற்சி அளித்தார். பயிற்சியில் முன்னோடி விவசாயிகள் புரிசை சுப்பிரமணியன், தவசி கற்பகம், கீழ்கொளத்தூர் தமிழரசி உள்ளிட்ட 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## குப்பனத்தம் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

செங்கம் அருகேயுள்ள குப்பனத்தம் அணையில் இருந்து பாசனத்துக்கு புதன்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

செங்கம் அருகேயுள்ள துரிஞ்சிகுப்பம் கிராமத்தில் உள்ள குப்பனத்தம் அணையின் மொத்த கொள்ளளவு 59.04 அடியாகும் தற்போது 58.91 அடி தண்ணீர் உள்ளது.

தற்போது விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசின் உத்தரவுப்படி பாசனத்துக்கு குப்பனத்தம் அணையில் தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

அதில், மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் பங்கேற்று தண்ணீரை திறந்து வைத்தார். பின்னர் அவர் கூறுகையில், பிப். 17-ம் தேதி முதல் விநாடிக்கு 240 கனஅடி வீதம் 16 நாள்களுக்கும், மார்ச் 4-ம் தேதி முதல் 9 நாள்களுக்கு 235 கன அடி வீதமும் திறந்து விடப்படும்.

மொத்தம், 514.52 மி.கனஅடி தண்ணீர் திறந்து விடப்படும். இதன் மூலம் 47 கிராமங்களைச் சேர்ந்த 47 ஏரிகளுக்கு உள்பட்ட விளை நிலங்கள் பாசன வசதி பெறும் என அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கூட்டுறவு பண்டக சாலை இயக்குநர் பெருமாள்நகர் ராஜன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் நைனாக்கண்ணு, மக்களவை உறுப்பினர் வனரோஜா, மாவட்ட

வணிகவரித் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆர்.மதியழகன், எல்.புருசோத்தமன், செங்கம் ஒன்றிய குழுத் தலைவர் எம்.கணேசன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ஆர்.கோவிந்தராஜன், உதவி செயற்பொறியாளர் ராஜசேகரன், பொறியாளர்கள் ராஜாராம், மதுரைவீரன், செல்வராஜ், ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர்கள் ஜோதிகிருஷ்ணமூர்த்தி, வெங்கட்ராமன், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, சங்கர், ஊராட்சிமன்றத் தலைவர்கள் (குப்பனத்தம்) ஜெயப்பிரகாஷ், (கல்லாத்தூர்) சிவானந்தம், முன்னாள் தலைவர் அசோக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரியலூரில் 28-வது நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

அரியலூர் மாவட்டத்தில் 2015-2016 ஆம் ஆண்டில் சம்பா பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு, விவசாயிகள் பயன்பெறும் வகையில் 27 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும், அரியலூர் வட்டம், வடுகபாளையம் ஊராட்சி திருவெங்கனூரில் மற்றுமொரு நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இதைப் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

## விராலிமலை வட்டாரத்தில் நெற்பயிர் பாதுகாப்பு பயிற்சி

வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (2015-16) திட்டத்தின் கீழ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்த பயிற்சி விராலிமலை வட்டாரத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

அத்திப்பள்ளம், வாணதிராயன்பட்டியில் நடைப்பெற்ற பயிற்சிக்கு வாணதிராயன்பட்டி ஊராட்சி தலைவர் செ. புகழேந்தி தலைமை வகித்தார்.

இதில், நெற்பயிரைத் தாக்கும் இலைப்பேன்,இலைசுருட்டு புழு,குருத்து பூச்சி,கதிர் நாவாய் பூச்சி,ஆணைக்கொம்பன் மற்றும் நோய் தாக்குதலான குலைநோய்,ஒருங்கிணைந்த களை மற்றும் உர மேலாண்மை முறைகள் குறித்தும் வேளாண் அலுவலர் க. நடராஜன் விளக்கி கூறினார்.

ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளான உழவியல் முறைகள், இயந்திரக் கட்டுப்பாடு, ரசாயண கட்டுப்பாடு மற்றும் உயிரியல் கட்டுப்பாடு முறைகள் பற்றியும், பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் போது கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகள் குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் த. லட்சுமிபிரபா பயிற்சியளித்தார்.

பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய பயிற்சி கையேடு வழங்கப்பட்டன. இதில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் பொ. சுப்பிரமணி, ந. உமாமகேஸ்வரி செய்திருந்தனர்.

## இயந்திரம் மூலம் வைக்கோல் கட்டும் பணி

வேதாரண்யம் பகுதியில் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் வைக்கோல் சேகரிக்கப்பட்டு, கட்டு கட்டும் பணி சில இடங்களில் இயந்திரங்கள் மூலம் நடைபெற்று வருகிறது.

கால்நடை வளர்ப்புக்கு சிறப்பு பெற்ற வேதாரண்யம் பகுதியில் நெல் அறுவடைக்குப் பிறகு சேகரிக்கப்படும் வைக்கோல் போராக அமைத்து மாடுகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம்.

கடந்த சில ஆண்டுகளாக அறுவடைக்கு இயந்திரங்கள் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. அறுவடை செய்யப்பட்ட வயல்களில் கிடக்கும் வைக்கோலை சேகரிக்கும் பணியில் பெண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தற்போது, ஒரு சில இடங்களில் இந்த பணியில் இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

சுமார் 3 அடி விட்டம், 1 மீட்டர் அகளம் என்ற அளவில் சுமார் 35 கிலோ எடை கொண்ட கட்டுகளாகக் கட்டப்படுகிறது. கட்டு ஒன்றுக்கு கூலியாக ரூ. 37 கட்டணமாகப் பெறப்படுகிறது.

## தருமபுரிக்கு 1000 டன் நெல் அனுப்பிவைப்பு

நீடாமங்கலம், மன்னார்குடி பகுதியில் கொள்முதல் செய்யப்பட்ட 1000 டன் சன்னரக நெல் அரவைக்காக தருமபுரிக்கு புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டன.

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் நீடாமங்கலம் ரயில் நிலையம் மூலம் நாள்தோறும் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. புதன்கிழமை நீடாமங்கலத்திலிருந்து 1000 டன் எடையுள்ள நெல் மூட்டைகள் நீடாமங்கலம், மன்னார்குடி பகுதிகளில் உள்ள கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்டு நீடாமங்கலத்தில் உள்ள ரயில் நிலையத்துக்கு 75 லாரிகளில் கொண்டுவரப்பட்டது. இந்த நெல் மூட்டைகள் அனைத்தும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு அரவைக்காக தருமபுரிக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## மானியத்தில் எள் விதை விநியோகம்

அண்ணாகிராமம் வேளாண்மை உதவி இயக்குநர் சீ.இளவரசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அண்ணாகிராமம் வட்டாரக்கில் நடப்பு மாசி பட்டத்துக்கேற்ற எள் விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.இதில், 80 முதல் 85 நாள்கள் வரை வயதுடைய டி.எம்.வி-3 ரக சான்று பெற்ற விதைகளுக்கு, விதை கிராமத் திட்டத்தின் கீழ் ஒரு கிலோவுக்கு ரூ.12 மானியம் வழங்கப்படுகிறது. எனவே, அண்ணாகிராமம் வட்டாரத்துக்கு உள்பட்ட கிராமங்களில் எள் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், அண்ணாகிராமம் மற்றும் புதுப்பேட்டை வேளாண்மை விரிவாக்க

மையங்களில் டி.எம்.வி-3 ரக எள் விதைகளை மானிய விலையில் பெறலாம் என தெரிவித்துள்ளார்.

**"உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும்'**

உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்துச் செயல்பட்டால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் என ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிதம்பரம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பயறு வகைப் பயிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

சென்னை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இணை இயக்குநர் க.இளங்கோ கூட்டத்துக்கு தலைமை வகித்து பேசுகையில், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்து செயல்படுவதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். தமிழக அரசின் கொள்கைப்படி 2 மடங்கு உற்பத்தி, 3 மடங்காக உயரும்.

இத்திட்டத்தில் ஆயிரம் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்படுவதால் இடுபொருள்களை குறைந்த விலையில் பெற்று, உயர் சாகுபடி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும்.

மேலும் இடைத்தரகர்களைக் குறைத்து, பொருள்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்வதன் மூலம் நேரடி விற்பனையில் ஈடுபட முடியும் என்றார்.

சிதம்பரம் கோட்ட வேளாண்மை அலுவலர் ச.அமுதா பங்கேற்று பேசியது: சிதம்பரம் கோட்டத்தில் உள்ள பரங்கிப்பேட்டை, புவனகிரி, கீரப்பாளையம், குமராட்சி, காட்டுமன்னார்கோவில் ஆகிய 5 டெல்டா வட்டாரங்களில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு சுமார் 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, சராசரியாக 50 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்குள்ள விவசாயிகள் தங்களது விளை பொருள்களை, உள்ளூர் வியாபாரிகளிடம் சந்தை

நிலவரத்தை அறிந்து விற்பனை செய்ய முடியாமலும், மிகக் குறைந்த விலையிலும் விற்றும் நஷ்டமடைகின்றனர்.

இதற்காகப் பயறு வகைப் பயிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்து, 1,000 சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைந்த கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்து ஒரு நிறுவனமாக செயல்பட வேண்டும்.

இதன்மூலம் விளைபொருள்கள் நேரடியாக சந்தை நுண்ணறிவுத் தகவல்களை அறிந்து விற்பனை செய்ய முடியும். விளைபொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதன் மூலம் அதிக லாபமும் அடையலாம் என்றார். கடலூர் வேளாண் துணை இயக்குநர் வி.ஆறுமுகம் முன்னிலை வகித்துப் பேசினார். கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் சுரேஷ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராயர், தனசேகர், ஆறுமுகம், ரமேஷ், முன்னோடி விவசாயிகள் விஜயக்குமார், ரவீந்திரன், சிவராஜ், ரத்தினசுப்பிரமணியன், செல்வராஜ், வேல்முருகன், ரமேஷ், குஞ்சிதபாதம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்தில், பிப்ரவரி மாத விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (பிப்.19) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

ஆட்சியர் அலுவலகத்தில், ஆட்சியர் எம்.லட்சுமி தலைமையில் நடைபெற உள்ள, இந்த கூட்டத்தில், விவசாய பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்கள் பகுதி குறைகளை தெரிவித்து பயன்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பனியால் பாதிக்கும் பணப்பயிர்**

உலகின் முக்கிய வர்த்தகப் பயிரான தேயிலை பருவநிலை மாற்றத்தினால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. சென்ற ஆண்டில் மட்டும் பருவநிலை மாற்றத்தினால் தேயிலை உற்பத்தியில் 16 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. தேயிலைச் செடிகளில் பனி விழுவதால் கென்யாவில் தேயிலை வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. உலகில் தேயிலை உற்பத்தியில் மூன்றாவது நாடாக கென்யா உள்ளது. தேயிலைச் செடிகளுக்குள் மரங்களை நட்டு பனியை குறைக்கின்றனர். இதன் மூலம் தேயிலை மீது பனி விழுவதற்கு பதிலாக மரங்களின் மீது விழுகிறது. கென்யா நாட்டு தேயிலை விவசாயிகள் தற்போது நாட்டுக்காக இல்லாவிட்டாலும் தேயிலைக்காவது மரங்களை நடுகின்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாளை (19ம் தேதி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெறும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்று வருகிறது.

அதில், விவசாயிகள் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொள்வர். கூட்டத்தில் விவசாயிகள், வேளாண் துறை மற்றும் அதன் சார்பு துறைகள் குறித்து கேள்வி கேட்பர். கோரிக்கை மனுவும் அளிப்பர். இந்த கூட்டம், நாளை (19ம் தேதி) மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி

தலைமையில், ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில், காலை, 11:00 மணியளவில் நடைபெறுகிறது.

## மூலிகை செடிகளை அழிவில் இருந்து காக்க நடவடிக்கை

கோத்தகிரி: மூலிகை செடிகளை அழிவில் இருந்து காப்பது குறித்த கருத்தரங்கு; பயிற்சிமுகாம் கோத்தகிரியில் நடந்தது.

நீலகிரியின், பல பகுதிகளில் மூலிகை செடிகள் நிறைந்துள்ளன. குறிப்பாக, வனத்தை ஒட்டி, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில், மூலிகை செடிகள் அதிகமாக உள்ளன. மூலிகை காற்றை சுவாசிக்கும் பழங்குடி மக்கள், மூலிகை வைத்தியத்திலும், சிறந்து விளங்குகின்றனர்.

இத்தகைய மூலிகை வைத்தியம், மெல்ல,மெல்ல அழிந்து வருகிறது. இந்நிலையில், மூலிகை வைத்தியத்தை பழங்குடியின மக்களின் வாரிசுகள் முழுக்க தெரிந்துக்கொள்ளவும், அழிந்து வரும் மூலிகை செடிகளை வளர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்கம் (நாவா) மற்றும் 'பிரண்டஸ் ஹோப்' அமைப்பு இணைந்து, இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளன. முதற்கட்டமாக, 17 பேருக்கு இதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கோத்தகிரி பகுதியில், கரிக்கையூர் கிராமத்தில், பயற்சி மையம் துவக்கி, பயற்சி பெறுவோருக்கு மதிப்பூதியம் வழங்கி, வர்த்தகத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் முத்தாய்ப்பாக, பழங்குடியின மக்கள் மூலிகை மூலம் தயாரித்த மருந்துகள், மூலிகை செடிகளின் வகைகள் குறித்த கண்காட்சி நடத்தப்பட்டு, பழங்குடியின மூலிகை வைத்தியர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. பிரண்டஸ் ஹோப் மூலிகை மருத்துவ மையத்தை சேர்ந்த டேவிட் போப்லி, நாவா ஆலோசகர் ஆல்வாஸ், திட்ட நிர்வாகிகள் ராஜேஸ்வரி, பிரியங்கா, கிராம மூலிகை வைத்தியம் திட்ட இயக்குனர் ராஜ்குமார், பண்டைய பழங்குடியினர் பாதுகாப்பு மைய செயலர் புஷ்பகுமார் மற்றும் இயற்கை ஆர்வலர் லட்சுமி நாராயணன் ஆகியோர், பங்கேற்றனர்.

## கறிவேப்பிலை விளைச்சல் அதிகரிப்பு

பனைக்குளம்:ராமநாதபுரம் கடற்கரை கிராமங்களில் கறிவேப் பிலை விளைச்சல் அதிகரித்துள்ளது.

ராமநாதபுரம் பனைக்குளம், அழகன்குளம், ஆற்றாங்கரை உள்ளிட்ட பகுதிகளில் கருவேப்பிலை மரங்கள் ஊடுபயிராக நடப்பட்டுள்ளன. இங்கு விளையும் கருவேப்பிலை வாசனை மிகுதியாக இருக்கும். தற்போது அப்பகுதியில் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. விற்பனைக்காக அவை ராமநாதபுரம், மண்டபம், ராமேஸ்வரம் பகுதிகளுக்கு அனுப்பப் படுகின்றன.

ஆற்றாங்கரையை சேர்ந்த வள்ளி கூறுகையில், ""கருவேப்பிலை மரத்திற்கு இயற்கை உரங்களை இடுகிறோம். ஒரு சாக்கு மூடை ரூ.150க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு பயிற்சி

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையின் அட்மா திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய மாவட்ட அளவில் விவசாயிகளுக்கான பயிற்சி வளவனேரி கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சிக்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்தார். சோழமாதேவி கிரீடு வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின் கோடை உழவு, நெல் சாகுபடி முறைகள், நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விளக்கி கூறினார். பயிற்சியில் விவசாயிகளுக்கு விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. நெல்சாகுபடி வயலுக்கு

விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை கண்டறிவது, தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் போன்றவை குறித்து விளக்கி கூறப்பட்டது. பயிற்சியில் வளவனேரி கிராமத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் முருகன், உதவி வேளாண் அலுவலர் கவிதா ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி திட்ட செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

உளுந்து, பயறு சாகுபடியில் புதிய தொழில்நுட்ப பயிற்சி பாபநாசம் : கபிஸ்தலம் அருகே கணபதி அக்ரஹாரத்தில் உழவர்மன்ற உறுப்பினர்களுக்கு உளுந்து, பயிறு, பருத்தி சாகுபடியில் புதிய தொழில்நுட்ப பயிலரங்கம் நடைபெற்றது.

பாபநாசம் அடுத்த கபிஸ்தலம் அருகே கணபதி அக்ரஹாரத்தில் பாபநாசம் விவேகானந்தா சமூக தொண்டு நிறுவன வழிகாட்டுதலுடன், நபார்டு வங்கி ஆதரவுடன் உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு உளுந்து, பயறு, பருத்தி சாகுபடியில் புதிய தொழில் நுட்பம், இயற்கை உரம், மண் மேலாண்மை, நீர் மேலாண்மை குறித்த பயிலரங்கம் நடைபெற்றது. கண்ணதாசன் தலைமை வகித்தார். பிரவீன்குமார் வரவேற்றார். 50க்கும் மேற்பட்ட தீவிர சாகுபடியாளர்கள் கலந்து கொண்டனர். பயிலரங்கில் வேளாண்மை தொழில் நுட்ப நிபுணர்களான சத்தியமூர்த்தி, பூ முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியளித்தனர். தொகுதி ஒருங்கிணைப்பாளர் மணி நன்றி கூறினார்.

## வலி, வீக்கத்தை போக்கும் புளிச்ச கீரை




கட்டிகளை ஆற்ற கூடியதும், பித்தத்தை போக்கவல்லதும், உடல் வலி, வீக்கத்தை குணமாக்கும் தன்மை கொண்டதும், பசியை தூண்டக் கூடியதுமான புளிச்ச கீரையை பற்றி பார்ப்போம். புளிச்ச கீரையில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. சமையலில் பயன்படுத்த கூடியது இது, அற்புதமான மூலிகையாக விளங்குகிறது. மேல் பூச்சு மருந்தாகவும் பயன்படுகிறது. உள் உறுப்புகளுக்கு புத்துணர்வு கொடுக்க கூடியது. வலி, வீக்கத்தை போக்கும். புண்களை ஆற்றக் கூடிய தன்மை கொண்டது.புளிச்ச கீரையில் வைட்டமின் சி அதிகமாக உள்ளது. தோல், எலும்புகள் பாதிப்படைவதை தடுக்கிறது. ரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. புளிச்ச கீரையை நன்றாக அரைத்து, பூசுவதால் கட்டிகள் விரைவில் கரையும்.

புளிச்ச கீரையின் பூக்களை பயன்படுத்தி இருமலுக்கான மருந்து தயாரிக்கலாம். பூக்களை நசுக்கி சாறு எடுக்கவும். ஒரு ஸ்பூன் சாறில், 2 சிட்டிகை மிளகுப் பொடி, ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து கலக்கவும். இதை சாப்பிட இருமல் சரியாகும். சளியை கரைத்து வெளியேற்றும். சுவாச கோளாறை போக்குகிறது. வயிற்றில் அமிலத்தன்மை குறையும்போது பசி இல்லாமல் போகிறது. புளிச்ச கீரை பசியை தூண்டும். நோய் எதிர்ப்பு சக்தி உடையது.புளிச்ச கீரையின் மொட்டுக்களை பயன்படுத்தி வாய் கசப்பு, வாந்திக்கான மருந்து தயாரிக்கலாம்: இதற்கு தேவையான

பொருட்கள்: புளிச்ச கீரை மொட்டுக்கள், மிளகுப் பொடி, தேன். சுமார் 10 மொட்டுக்களை எடுத்துக் கொள்ளவும். ஒரு டம்ளர் விட்டு கொதிக்க வைக்கவும். வடிக்கட்டிய பின் உப்பு, மிளகு, தேன் சேர்த்து கலந்து குடித்தால் தலைசுற்றல் சரியாகும். பித்த வாந்திக்கான மருந்தாகிறது.

பல்வேறு நன்மைகளை கொண்ட இந்த கீரை புளிப்பு சத்தை உடையது. உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றும் தன்மை கொண்டது. வயிற்று புண்களை ஆற்றும். பித்தத்தினால் ஏற்படும் வாந்தி, அரிப்பு, மயக்கம் ஆகியவற்றுக்கு மருந்தாகிறது. பித்த சமனியாக விளங்குகிறது. புளிச்ச கீரையை அடிக்கடி உணவில் சேர்ப்பதால் இதய நாளங்களில் அடைப்பு ஏற்படாமல் தடுக்கிறது. புளிச்ச கீரையை பயன்படுத்தி சூப் தயாரிக்கலாம்: தேவையான பொருட்கள்: புளிச்ச கீரை, பட்டை, பூண்டு, வெங்காயம், நல்லெண்ணெய், மிளகுப்பொடி, உப்பு.

பாத்திரத்தில் நல்லெண்ணெய் காய்ந்தவுடன் ஒரு துண்டு பட்டை, 2 பல் பூண்டு தட்டி போடவும். வெங்காயம் வதங்கியவுடன் புளிச்ச கீரையை சேர்த்து வதக்கவும். உப்பு சேர்த்து தண்ணீர் விட்டு சேர்த்து கொதிக்க வைக்கவும். வடிகட்டி மிளகு பொடி சேர்த்து குடித்துவர உடல்நலம் பெறும். புளிச்ச கீரை உன்னதமான உணவு மற்றும் மருந்தாகிறது. ஊடு பயிராக பயிரிடப்படும் இது வாயு கோளாறுகளை போக்கும். சத்து குறைபாட்டினால் ஏற்படும் எலும்புருக்கி நோயை குணமாக்கும். வாந்தியை நிறுத்த கூடியது. மலச்சிக்கலை போக்கும் தன்மை கொண்டது. சிறுநீரக கோளாறுகளை போக்கும். சிறுநீர் பெருக்கியாக உள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 60 ஆண்டு கனவான அத்திக்கடவு–அவினாசி திட்டம்




கொங்கு மண்டலம் என்று அழைக்கப்படும் கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களில் உள்ள மக்கள் அனைவரும் ஏழை–பணக்காரன், படித்தவர்–படிக்காதவர், இந்த சாதி–அந்த சாதி, ஆண்– பெண் என்ற வித்தியாசம் இல்லாமல், ஒட்டுமொத்த மக்களே அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று போராட்டத்தில் குதித்துள்ளனர். கொங்குமண்டலம் என்பது வேளாண்மையையே நம்பி வாழும் மண்டலம் ஆகும். இந்த மக்கள் கடந்த 60 ஆண்டுகளாகவே அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் முதல்–அமைச்சராக இருந்தபோது, 1957–ம் ஆண்டு முதல் 67–ம் ஆண்டு வரை மாரப்ப கவுண்டர் அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் இந்தத்திட்டத்தை வலியுறுத்திய நேரத்தில், பெருந்தலைவர் காமராஜர் இதற்கு ஒப்புதல் அளித்து, ரூ.132 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான முயற்சிகளை தொடங்கினார். ஆனால், காமராஜர் ஆட்சிக்குப்பிறகு, இந்தத்திட்டம்கனவாகிவிட்டது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மழைக்காலங்களில் ஊட்டி, குன்னூர் போன்ற பல பகுதிகளில் இருந்து மழைநீர் பெருக்கெடுத்து ஓடி, காரமடைக்கு மேலேயுள்ள மலைப்பகுதியில் இருக்கும் பில்லூர் ஏரிக்கு வந்துசேரும். பில்லூர் அணை இருக்கும் பகுதிதான் அத்திக்கடவு என்று அழைக்கப்படுகிறது. இந்த பில்லூர் அணையில் இருந்து உபரிநீர் வெளிவரும் காலங்களில் ஏறத்தாழ 30 டிஎம்சி தண்ணீர் அளவில் கடலில் போய் கலக்கிறது. காமராஜர் போட்ட திட்டப்படி, அத்திக்கடவில் இருந்து கால்வாய் தோண்டப்பட்டு கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகளில் தண்ணீரை நிரப்பினால், இந்த மாவட்டம் முழுவதும் ஒருபக்கம் விவசாயத்துக்கு பயன்படுத்தினாலும், மறுபக்கம் நிலத்தடிநீர் மட்டமும் உயர்ந்துவிடும் என்பது இதன் உண்மையான பயனாகும். கொங்குமண்டலத்தில் இப்போது நிலத்தடிநீர் மட்டம் ஆயிரம் அடிக்கும் கீழே போய்விட்டது. அத்திக்கடவு–அவினாசி திட்டம் வந்தால், நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்து 50 அடியில் தண்ணீரை பார்க்கலாம்.

தங்கள் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதால், இந்த திட்டம் குறித்து ஒரு உறுதியான தகவல் வேண்டும் என்பதுதான் இந்த மக்களின் குறிப்பாக வேளாண் பெருமக்களின் கோரிக்கையாகும். தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டில், ''2011–ம் ஆண்டில் அத்திக்கடவு–அவினாசி திட்டத்துக்காக ரூ.1,862 கோடி செலவில் திட்ட அறிக்கை தீட்டப்பட்டது. பில்லூர் அருகில் பவானி ஆற்றில் இருந்து 2 ஆயிரம் கனஅடி வெள்ள உபரிநீரை எடுத்து, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள 31

பொதுப்பணித்துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றிய குளங்கள் மற்றும் ஏனைய 538 நீர்நிலைகளில் தண்ணீர் நிரப்புவதற்கு வகைசெய்யும் இந்த திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை நிதிஉதவி கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. நீர்ப்பாசனம், நிலத்தடிநீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டமாக இதை செயல்படுத்த முதல்–அமைச்சர் ஆணையிட்டுள்ளார். அதன்படி, மத்திய அரசுக்கு திருத்திய கருத்துரு உடனடியாக அனுப்பப்படும். அதேசமயம் இந்த திட்டத்தின் ஆரம்பக்கட்ட பணிகள் தொடங்கப்படும்'' என்று கூறப்பட்டுள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பு இந்த பட்ஜெட் அறிவிப்புக்கு நிர்வாக ரீதியான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவேண்டும். வரப்போகும் புதிய அரசு அத்திக்கடவு–அவினாசி திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து மாநில அரசு திட்டமாக செயல்படுத்தவேண்டும். அதுபோல, கடலில் வீணாக போய் கலக்கும் தாமிரபரணி, காவிரி உள்பட அனைத்து ஆறுகளின் நீரையும் சேமித்து, விவசாயத்துக்கும், குடிநீருக்கும் பயனளிக்கும் வகையில் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதையே தனது முதல் கடமையாகக் கொள்ளவேண்டும். இலவசம் பெரிதல்ல, மாநிலத்தின் வளமே பெரிது என்பதை குறிக்கோளாகக்கொண்டு அடுத்து அமையப்போகும் அரசு செயல்படவேண்டும்.

**2 லட்சத்து 19 ஆயிரம் மரக்கன்றுகள் நட திட்டம் அமைச்சர் பி.பழனியப்பன் தொடங்கி வைத்தார்**



முதல்-அமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு தர்மபுரி மாவட்டம் முழுவதும் 2 லட்சத்து 19 ஆயிரத்து 350 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை அமைச்சர் பி.பழனியப்பன்தொடங்கிவைத்தார்.

மரக்கன்றுநடும்பணி

முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் 68-வது பிறந்தநாளை முன்னிட்டு தர்மபுரி மாவட்டம் முழுவதும் 2 லட்சத்து 19 ஆயிரத்து 350 மரக்கன்றுகள் நட அ.தி.மு.க. சார்பில் திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த திட்டத்திற்கான தொடக்க விழா தர்மபுரி செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் விவேகானந்தன் தலைமை தாங்கினார். மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு லோகநாதன், தர்மபுரி மண்டல வனப்பாதுகாவலர் உலகநாதன், மாவட்ட வன அலுவலர் திருமால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் கலந்து கொண்டு

மரக்கன்றுகளை நட்டு வைத்து இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

சுழல்நிதிகடன்

அப்போது அவர் கூறுகையில், வனத்துறையின் மத்திய நாற்றங்கால்களில் உற்பத்தி செய்யப்பட்ட 25 ஆயிரத்து 800 மரக்கன்றுகள் வனக்காப்பு காட்டில் நடப்பட உள்ளன. ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மூலமாக 1 லட்சத்து 93 ஆயிரத்து 550 மரக்கன்றுகள் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கிராமப்புறங்களில் நடவு செய்யப்படும் என்று அமைச்சர் கூறினார்.

இதைத்தொடர்ந்து தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்ட கிராமம் மற்றும் தமிழ்நாடு உயிர் பன்மை பாதுகாப்பு பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் வனக்குழு மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 217 பேருக்கு சுழல்நிதி கடன் தொகையாக ரூ.24 லட்சத்து 31 ஆயிரத்திற்கான காசோலைகளை அமைச்சர் வழங்கினார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் பூக்கடை முனுசாமி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் நாகராஜன், முன்னாள் பால்வளத்தலைவர் ராஜேந்திரன், டான்சில்க் தலைவர் மணிவண்ணன், கோட்ட வனஅலுவலர் அன்பு, உதவி வனப்பாதுகாவலர் ஆரோக்கியராஜ் சேவியர், வனச்சரக அலுவலர்கள் ராஜலிங்கம்,தங்கராஜ், மாதையன், மாணிக்கம் மற்றும் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

**கோடை சீசனையொட்டி குன்னூர் காட்டேரி பூங்காவில் 1 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்படும்**



குன்னூர்

கோடை சீசனையொட்டி குன்னூர் காட்டேரி பூங்காவில் 1 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்படும் என்று பூங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்.

காட்டேரி பூங்கா

குன்னூர்– மேட்டுப்பாளையம் சாலையில் காட்டேரி பூங்கா அமைந்து உள்ளது. தோட்டக்கலைத்துறைக்கு சொந்தமான இந்த பூங்கா சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் அமைந்து உள்ளது. கடந்த 2011–ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த பூங்காவில் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன. இயற்கை சூழ்நிலையில் அமைந்துள்ள இந்த பூங்கா சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து உள்ளது.

ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் முதல் சீசனும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 2–வது சீசனும் நிலவுகின்றன. புதிய மலர் நாற்றுகள் நடவு செய்யப்படுகிறது. இதன்படி ஏப்ரல், மே மாதங்களில்

தொடங்கும் முதல் சீசனுக்கு மலர் நடவு செய்யும் பணி காட்டேரி பூங்காவில் தற்போது தொடங்கி உள்ளது. இதுகுறித்து பூங்கா அதிகாரிகள் கூறியதாவது:–

<u>1 லட்சம் மலர் நாற்றுகள்</u>

கோடை சீசனையொட்டி மாவட்டத்தில் உள்ள பிற பூங்காக்களில் மலர்நாற்றுகளை நடவு செய்யும் பணி ஏற்கனவே முடிவுற்றுள்ளது. ஆனால் காட்டேரி பூங்காவின் சீதோஷ்ண நிலை மலர் நாற்றுகளின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருப்பதால் இந்த மாத இறுதிக்குள் மலர்நாற்று நடவு செய்யும் பணி முடிவு பெறும். தற்போது ரோஜா, டேலியா, சால்வியா, கார்னேசன் உள்ளிட்ட மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது.

இதேபோல் ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஆந்தோரியம், பிளாஸ், மேரிகோல்டு, பெட்டூனியா, பேன்சி உள்ளிட்ட வகைகளை சேர்ந்த மலர்கள் இன்னும் ஓரிரு நாட்களில் பூக்காவுக்கு வந்து விடும். பின்னர் காட்டேரி பூங்காவில் மொத்தம் 1 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி**



தூத்துக்குடி,

தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மீன்வள அலுவலர் பயிற்சி நிலையம் சார்பில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சியை மீன்வளக் கல்லூரியில் நடத்தி வருகிறது. பயிற்சி தொடக்க விழாவில் மீன்வள அலுவலர் பயிற்சி நிலைய இயக்குநர் இரா.செந்திலாதிபன் வரவேற்று பேசினார். மீன்வளக்கல்லூரி முதல்வர் கோ.சுகுமார் தலைமை தாங்கினார். ஓய்வு பெற்ற பேராசிரியர் கு.சஞ்சீவிராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். பயிற்சியில் மீன்வள பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் 29 உதவி பேராசிரியர்கள் பங்கேற்றனர். இவர்களுக்கு பயிற்றுனர் ராதா பயிற்சி அளித்தார். மீன்வள விரிவாக்கத்துறை தலைவர் கி.வீரபத்ரன் நன்றி கூறினார்.

**அரவைக்காக 8 ஆயிரம் டன் நெல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் தகவல்**



திருவாரூர் ரெயில் நிலையத்தில் இருந்து திருப்பூருக்கு அனுப்புவதற்காக நெல் மூட்டைகளை சுமை தூக்கும் பணியாளர்கள் சரக்கு ரெயிலில் ஏற்றியபோது எடுத்த படம்.

நடப்பு சம்பா பருவத்தில் இதுவரை அரவைக்காக 8 ஆயிரம் டன் நெல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்பொருள் வாணிபக்கழகஅதிகாரிகள்கூறினார்.

சம்பாபருவம்

காவிரி டெல்டா மாவட்டங்களில் ஒன்றாக விளங்கும் திருவாரூர் மாவட்டத்தில் சம்பா பருவம் முடிவடையும் தருவாயில் உள்ளது. மாவட்டம் முழுவதும் வயல்களில் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லை விற்பனை செய்து வருகிறார்கள். இதனால் நெல் கொள்முதல் அளவு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்த நிலையில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை, அரிசியாக மாற்றுவதற்காக வெளி மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலைகளுக்கு அனுப்பும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நேற்று திருவாரூரில் இருந்து 7-வது முறையாக நெல் அனுப்பும் பணி நடந்தது. இதில் திருப்பூர் மாவட்டத்திற்கு 950 டன் பொது ரக நெல் அரவைக்காக அனுப்பப்பட்டது.

இதையொட்டி திருவாரூரை சுற்றி உள்ள கொள்முதல் நிலையங்களில் இருந்து திருவாரூர் ரெயில் நிலையத்துக்கு 83 லாரிகளில் கொண்டு வரப்பட்ட 950 டன் நெல்லை சுமை தூக்கும் பணியாளர்கள் சரக்கு ரெயிலில் 21 பெட்டிகளில் ஏற்றி திருப்பூருக்கு அனுப்பி வைத்தனர்.

8ஆயிரம்டன்

திருவாரூரில் நடப்பு சம்பா பருவத்தில் நடைபெற்று வரும் நெல் அனுப்பும் பணி குறித்து நுகர்பொருள் வாணிபக்கழக தர ஆய்வாளர்கள் கூறியதாவது:-

திருவாரூரில் இருந்து அரவைக்காக வெளி மாவட்டங்களுக்கு நெல் அனுப்பப்படுவது வழக்கம். நடப்பு சம்பா பருவத்தில் அரவைக்கு நெல் அனுப்பும் பணி கடந்த 3-ந் தேதி தொடங்கியது. இன்று (நேற்று) 7-வது முறையாக நெல் அனுப்பப்பட்டது. இவ்வாறு அனுப்பப்படும் நெல் அரவை செய்யப்பட்டு, பொது வினியோக திட்டத்தில் நியாய விலை

கடைகளில் அரிசியாக வினியோகம் செய்யப்படும். நடப்பு சம்பா பருவத்தில் இதுவரை 8 ஆயிரம் டன் நெல் அரவைக்காக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. சிவகங்கை, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு நெல் அனுப்பப்பட்டு இருக்கிறது. இப்பணி தொடர்ந்து நடைபெறும். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.